Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 61
வெள்ளிக்கிழமை
26 ஜனவரி 2024
தை 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் எண்டது உண்மைதான் போல"

# அமைச்சர் சனத் நிஷாந்த கார் விபத்தில் நேற்றுப் பலி!

## மெய்ப்பாதுகாவலரும் உயிரிழப்பு



**கொழும்பு, ஜனவரி 26**
**கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவும், அவரது மெய்ப் பாதுகாவலரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.**
11

## நிஷாந்தவுக்கு பதில் ஜகத் பிரியங்க?

கொழும்பு, ஜன. 26
இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகியுள்ளதைத் தொடர்ந்து பொதுஜன பெரமுனவின் நாடளுமன்ற உறுப்பினராக ஜகத் பிரியங்க நியமிக்கப்படவுள்ளாரென அறிய
11

## நிகழ்நிலைக் காப்புச்சட்டம் திரும்பப்பெறல் வேண்டும்!

### சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

கொழும்பு, ஜன. 26
நிகழ்நிலைக் காப்புச்சட்டத்தை உடனடியாக மீளப்பெற்று மக்களின் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்குமாறு சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.
11

## நிகழ்நிலைச் சட்டம்: அமெ. அவதானிப்பு!

கொழும்பு, ஜன. 26
இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டம், மக்களின் உரிமைக்குரலை நசுக்கும் செயல் என்று அமெரிக்கத் தூதர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார்.
11

## நாடு முழுவதிலும் முதலீட்டு வலயம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 26
நாடு முழுவதும் முதலீட்டு வலயங்கள் உருவாக்கப்பட்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பத்து மடங்கு வேகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
பியகமவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
11

## பாகிஸ்தான் பிரஜை யாழில் கைதானார்!

### ஒருவர் தப்பியோட்டம் பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம், ஜன. 26
பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த பிரஜை ஒருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,
யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கடை ஒன்றில் இருவர் பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளனர். குறித்த பொருள்களுக்கான
11

## முல்லைத்தீவில் துப்பாக்கி ரவை: ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஜன. 26
முல்லைத்தீவு, உடுப்புக்குளம் பகுதியில் உள்ள தனியார் வீட்டுக் காணி ஒன்றிலிருந்து 100க்கும் அதிகமான, ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி ரவைகள் மீட்கப்பட்டன. அவற்றை உடைமையில்
11

## இளைஞரைக் கடத்த முயற்சி; கும்பலொன்று மடக்கிப்பிடிப்பு!

### யாழ்.நகரில் நேற்றுமுன்தினம் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 26
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் இளைஞர் ஒருவரைக் கடத்த முற்பட்ட குழுவொன்று பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் உள்ள முட்டாஸ்கடைச் சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
11

## கூட்டு நடவடிக்கைக்குழு மூலம் மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு

### இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம்



சென்னை, ஜன. 26
கூட்டுக் கடற்றொழில் நடவடிக்கைக்குழு மூலம் இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.
யாழ்ப்பாணம் - நெடுந்தீவு கடற்பரப்பினுள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட தமிழகத்தின் ஆறு மீனவர்கள் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களின் படகுகளும் பறிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு இந்தியாவின் வெளிவிவகார அமைச்சருக்கு தமிழக முதல்வர்
11

## ஸ்டாலின் எழுதிய கடிதம் தேர்தலுக்கான நாடகமே!

### வடக்கு மீனவர்கள் பதிலடி

யாழ்ப்பாணம், ஜன. 26
இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு, கூட்டுக் கடற்றொழில் நடவடிக்கை மூலம் தீர்வு காண வேண்டும் என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளமை தேர்தலை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் நாடகமே என்று வடமாகாண மீனவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.
11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டைப் பாவாடை அணிய நிகழ்நிலைச் சட்டம் தேவை!

## சப்பைக்கட்டுக் கட்டிய ஆளும் கட்சியினர்



**கொழும்பு, ஜன. 26**

**பெண்களுக்குத் தற்போது குட்டைப் பாவாடை அணிந்து செல்ல முடியவில்லை, கிளப்களுக்குச்சென்று ஆட்டம் போடவும் முடியவில்லை, காணொலி எடுத்து வெளியிட்டுவிடுகின்றனர். எனவே, சமூக ஊடகங்களைக் கண்காணிப்பதற்கான சட்டம் அவசியம் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்நிலைக் காப்புச் சட்ட வரைவு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பெண்களுக்கு குட்டைப் பாவாடை அணிந்துகொண்டு வீதியில் செல்ல முடியவில்லை, பின்னால் சென்று படமெடுத்து சமூக ஊடகங்களில் வெளியிடுகின்றனர், அதேபோல எமது கிராமங்களில் முன்னர், பெண்கள் சீத்தை கட்டிக்கொண்டு ஆற்றில் இறங்கிக் குளிப்பார்கள், இன்று பெண்களுக்கு ஆற்றில் குளிக்கமுடியவில்லை. கல் மீது அமர்ந்திருக்கும் பையன் அதைப் படமெடுத்து வலைத்தளங்களில் பதிவிடும் நிலை காணப்படுகின்றது.

கொழும்பில் உள்ள கிளப்களில் மாலை நேரங்களில் பெண்கள் ஆடுவார்கள், பாடுவார்கள், பெண்ணொருவர் அழகாக ஆடினால் அதை காணொலியெடுத்துப் பதிவிடுகின்றனர், குளிப்பதற்கு சுதந்திரம் இல்லை, குட்டைப் பாவாடை அணிய சுதந்திரம் இல்லை, கிளப்புக்குச் சென்று பாட்டுப்பாட சுதந்திரம் இல்லை. இப்படிப் பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன. எனவே, சமூக ஊடகங்கள் கண்காணிக்கப்படுவது அவசியம். உலகில் பல நாடுகளில் இணையக் கண்காணிப்பு உள்ளது. எனவே, இங்கும் கண்காணிப்பு அவசியம் - என்றார். (ஒ-44)

# துப்பாக்கிச்சூட்டில் ஐவர் இறப்பு; டுபாயிலிருந்தே ஒப்பந்தம்

## கைதாகிய சந்தேகநபர் வாக்குமூலம்

கொழும்பு, ஜன. 26

தென்னிலங்கையில் அரசியல் கட்சியொன்றின் தலைவர் உட்பட ஐவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் பல தகவல்களை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு, பெலியத்த பகுதிக்கருகில் கடந்த திங்கட்கிழமை இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் சமன் குமார என்ற 54 வயதான பிரதான சந்தேகநபர் நேற்றுமுன்தினம் அக்குரஸ்ஸ பங்கமுவ பிரதேசத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபர், கொலைகள் உள்ளிட்ட பல குற்றச்சம்பவங்கள் தொடர்பில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் டுபாயிலிருந்து பெறப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் திட்டமிடப்பட்டது என்று வாக்குமூலமளித்துள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய இரண்டு துப்பாக்கிதாரிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# சங்கிலி அறுத்து வந்ததல்ல அன்பால் வந்தது என் பெயர்

## நாடாளுமன்றில் சுவாரஸியம்

கொழும்பு, ஜன. 26

தனக்கு ஏன் 'ரத்தராங்' (தங்கம்) எனப் பெயர் வந்தது என்பதை சபையில் விவரித்தார் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான ரோஹித அபேகுணவர்த்தன.

இது அன்பால் வந்த பெயரேதவிர தங்கச் சங்கிலி அறுத்ததால் வந்த பெயர் அல்லவெனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு மீதான விவாதத்தில் உரையாற்றிய ரோஹித அபேகுணவர்த்தன இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

'நாம் பிறக்கும்போது செல்லப் பெயரும் வைப்பார்கள், அந்தவகையில் சிறு வயதில் எனக்கு 'ரத்தராங்'(தங்கம்) எனப் பெயர் வைத்துள்ளனர். ஊர் மக்களுக்கு 'ரத்தராங்' என்றால்தான் என்னைத் தெரியும். ஆனால் நான் அரசியலுக்கு வந்த பிறகு, தங்கச் சங்கிலி அறுப்பதால்தான் எனக்குத் தங்கம் என பெயர் வந்தது எனப் பரப்புரை முன்னெடுத்தனர். சமூகவலைத்தளங்களிலும் வதந்திகள் பரப்பப்பட்டன. நான் அறுத்ததாகக் கூறப்படும் ஒரு தங்கச் சங்கிலியைக் காட்டட்டும் அல்லது பொலிஸில் முறைப்பாடு இருந்தால் அதனை வெளிப்படுத்தட்டும். நாளையே நான் பதவி விலகத்தயார்' - என்றார். (ஒ-44)

# வீடுபுகுந்து தாக்குதல்!

வவுனியா, மகாறம்பைக்குளத்தில் உள்ள வீடொன்றுக்குள்புகுந்த இனந்தெரியாதவர்கள் அங்கிருந்த ஓட்டோவைச் சேதமாக்கியதுடன், வீட்டின் உரிமையாளருக்கும் அச்சுறுத்தல் விடுத்துத் தப்பிச் சென்றுள்ளனனர். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடந்துள்ளது வீட்டுக்குள் நுழைந்த 5 பேர் கொண்ட குழுவே தாக்குதல் நடத்தியுள்ளது என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-110)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஒன்றுபட வேண்டும்

## தமிழ் முற்போக்குக் கூட்டணி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.26

பிளவுபட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீள ஒன்றிணைப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ் முற்போக்குத் கூட்டணியின் பிரதித் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன், தமிழரசின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சிறீதரனுக்கு "தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியை வைத்துக்கொண்டு, பிளவுபட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒன்றிணைத்து, தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சியில் இறங்கவேண்டும்" எனக்கூறி தனது வாழ்த்துகளையும் தெரிவித்தார். (ப-44)

## சவூதிஅரேபியாவில்

# வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு முதன்முறையாக மதுபானசாலை

முஸ்லிம் அல்லாத வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கான மதுபானசாலை ஒன்றை முதல் தடவையாக சவூதிஅரேபியா திறக்கவுள்ளது.

சவூதிஅரேபியாவின் தலைநகர் றியாத்தில் வெளிநாட்டுத் தூதரகங்கள் அமைந்துள்ள பிரதேசத்திலேயே இந்த மதுபானசாலை அடுத்து வரும் வாரங்களில் திறக்கப்படவுள்ளது.

முஸ்லிம் அல்லாத வெளிநாட்டு இராஜதந்திரிகள் வெளிநாட்டு அமைச்சில் தமது தொலைபேசிகளூடாகப் பதிவுகளை மேற்கொண்டு அனுமதி பெற்று தமக்கான மாதாந்த ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும். சவூதிஅரேபியா அண்மைக்காலமாக தனது சட்டதிட்டங்களைத் தளர்த்தி வருகிறது. இதேவேளை மத சுற்றுலா தவிர்ந்த சுற்றுலாவுக்கு சவூதியில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன் மதுப்பாவனைக்கு கசையடி, சிறைத்தண்டனை போன்ற தண்டனைகளும் விதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-6)

# விகாரைமீது துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஜன.26

தொடம்கஸ்லந்த உடத்த பொல புராதன விகாரை மீது நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மதுராகொட பொலிஸார் தெரிவித்தனர்.

விகாராதிபதியின் வரவேற்பறையில் உள்ள ஜன்னல் ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட நிலையில், விகாராதிபதிக்கு எந்தப் பாதிப்பும்ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-இ)

# கந்தக்காட்டில் மீள மோதல்!

கொழும்பு, ஜன.26

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இரு குழுக்களுக்கு இடையே மீண்டும் மோதல் சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு நடந்துள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து சிலர் தப்பிச் சென்றனர் என்றும், அவர்களில் சிலர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் புனர்வாழ்வு நிலைய ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் அண்மையில் இருகுழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் பலர் தப்பிச் சென்று பின்னர் மீண்டும் கைது செய்யப்பட்டிருந்தனர். (எ-இ)

# புதிய வகை மாதுளைகள் இலங்கையில் அறிமுகம்

இலங்கையில் பயிரிடுவதற்காக 'மலே பிங்க்' மற்றும் 'லங்கா ரெட்' என்ற இரண்டு புதிய மாதுளை வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஹோமாகமவிலுள்ள தாவர வைரஸ் குறியீட்டுமையத்தினால்மேற்கொள்ளப்பட்ட திசு வளர்ப்பு ஆராய்ச்சியில் இந்தப் புதிய மாதுளை வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஒரு மாதுளை மரத்தின் ஆயுட்காலம் 30 ஆண்டுகள் என்றும் ஒரு வருடத்துக்கு ஒவ்வொரு மரத்திலிருந்தும் 20-25 கிலோ மாதுளை அறுவடையாகப் பெறலாம் எனவும் கணிக்கப்படுகிறது. அதன்படி ஒரு ஏக்கருக்கு மொத்தம் 400 மரங்கள் நடுவதன் மூலம் ஆண்டு வருமானம் ஒரு ஏக்கருக்கு 8 மில்லியன் ரூபா பெற்றுக்கொள்ளமுடியும். தற்போது இறக்குமதி செய்யப்படும் சிவப்பு மாதுளை வகைகளுக்கு மாற்றாக இந்த வகைகளைப் பயன்படுத்தலாம் என்றும் விவசாய அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்துச் சேவையில்லாது பள்ளிக்குடா மக்கள் சிரமம்

**கிளிநொச்சி, ஜன. 26**

**கிளிநொச்சியிலிருந்து பூநகரிக்கு வரும் இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பேருந்துகள் பள்ளிக்குடாக் கிராமத்துக்கு வருவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

பள்ளிக்குடா கிராமத்திலிருந்து காலையில் வவுனியா நோக்கிப் பயணிக்கும் தனியார் பேருந்தொன்றே மாலையில் பள்ளிக்குடா திரும்பும். இடைப்பட்ட நேரத்தில் பள்ளிக்குடாவுக்கு பேருந்து சேவைகள் இடம்பெறுவதில்லை. இதனால் பூநகரிப் பிரதேச மருத்துவமனை, பூநகரிப் பிரதேச செயலகம் என்பவற்றுக்குச் செல்வதற்கு மக்கள் இடர்நிலையை எதிர்நோக்குகின்றனர். அதற்கமைய கிளிநொச்சியிலிருந்து பூநகரிக்கு வருகைதரும் இ.போ.ச. பேருந்துகள் பள்ளிக்குடா, செட்டியார்தரைவெளி, 4 ஆம் கட்டை, சிறிவிக்னேஸ்வரா வித்தியாலயம் வரை வந்து பூநகரிக்குப் பயணிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-13)

## டெங்கு கட்டுப்பாட்டு செயற்றிட்டம்

யாழ்., ஜன.26

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் டெங்கு விழிப்புணர்வு நடைபவனி நேற்று முன்தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண மருத்துவமனையின் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கோப்பாய்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரத் திணைக்களத்தின் உயரதிகாரிகள் எனப் பலரும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ப-26)

## 20 அத்தியாவசியப் பொருள்கள் விசேட அமைச்சரவைப் பத்திரம்!

கொழும்பு, ஜன.26

பால்மா, உருளைக்கிழங்கு, வெங்காயம் உள்ளிட்ட 20 அத்தியாவசியப் பொருள்களின் தேவை அல்லது குறைபாடு தொடர்பில் எதிர்வரும் வாரம் விசேட அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாய அமைச்சின் தரவுகளுக்கு அமைவாக நாம் அதனைத் தயாரித்துள்ளோம். இந்த உற்பத்திப் பொருள்களுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடனும் அது தொடர்பில் நாம் பேச்சு நடத்தியுள்ளோம்.

நாம் பால்மாவுக்கான வரி அதிகரிப்பை மேற்கொண்டதன் மூலம் உள்ளூர் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவித்துள்ளோம். அத்துடன் தேசியப் பால் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். பால்மா இறக்குமதியைக் குறைக்கும் வகையிலேயே அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## 838 பேர் கைது

'யுக்திய' விசேட போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் கீழ் நேற்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியால நடவடிக்கைகளில் 838 சந்தேகநபர்கள்கைது செய்யப்பட்டுள்ளனர் 211 கிராம் ஹெரோயின், 78 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஆயிரத்து 192 போதை மாத்திரைகள் கைப்பற்றப் பட்டுள்ளன என்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

*நதீஸ்வரர் சிவன் கோவில்*

## காணிச்சிக்கலுக்கு மிக விரைவில் தீர்வு

**ஆளுநர் உறுதியளிப்பு**

முல்லைத்தீவு, ஜன. 26

முல்லைத்தீவு, துணுக்காய் பாணலிங்கேஸ்வரம் அருள்மிகு நர்மதா நதீஸ்வரர் சிவன் கோவிலின் காணிப்பிரச்சினை தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

ஆலயக் காணிப்பிப்பிரச்சினை உள்ளிட்ட சிக்கல்கள் தொடர்பில் இதன்போது ஆலய நிர்வாகத்தினரால் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. நர்மதா நதீஸ்வரர் சிவன் கோவிலின் காணிப்பிரச்சினை தொடர்பில் தனக்கு ஏற்கனவே தகவல் கிடைத்துள்ளதாகவும் அது தொடர்பில் தாம் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார். (ஒ-26-27)

## 65 வீதமானோர் இதுவரை கைது

*'யுக்திய' தொடரும் என்கிறார் பதில் பொலிஸ்மா அதிபர்*

கொழும்பு, ஜன.26

இலங்கைக்கு கடல் மார்க்கமாக வரும் போதைப்பொருள்களைப் பகிர்ந்தளிக்கும், விற்பனை நடவடிக்கையில் ஈடுபடும் நபர்களின் வலையமைப்பில் உள்ள 65 வீதமானோர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனையோரும் விரைவில் மடக்கிப் பிடிக்கப்படுவார்கள் என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து கடல்வழியாக இலங்கைக்குக் கடத்தப்படும் போதைப்பொருள்களை கிராமங்களுக்குப் பகிரும், விற்பனை செய்யும் வலையமைப்பில் உள்ளவர்கள் குறிவைக்கப்பட்டனர். 60 வீதமானோர் 'யுக்திய' ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்துக்குள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனையோரும் இரண்டாம் மாத 'யுக்திய' நடவடிக்கையின்போது கைது செய்யப்படுவார்கள். போதைப்பொருள் விற்பனைக்கு முடிவு கட்டும்வரை 'யுக்திய' நடவடிக்கை தொடரும் எனவும் அவர் தெரிவித்தார். (எ-இ)

# புதினம் தெரியுமோ?

**ம**காபாரதம் பாண்டவர்களை வைச்சுத்தான் எழுதப்பட்டாலும், அதில மெயின் பாத்திரம் கண்ணன்தான். ஆனாலும் மகாபாரதப் போர் நடக்கேக்க கண்ணன் நினைச்சிருந்தால் பாண்டவர்களின்ர படைக்கே தலைமை தாங்கியிருக்க முடியும். ஆனால் கண்ணன் அப்பிடிச் செய்யேலை. அருச்சுனன்ர தேரோட்டியாத்தான் அந்தச் சண்டைக்குக் கண்ணன் வெளிக்கிட்டவர். ஆனால் கண்ணன் அப்பிடி அருச்சுனனுக்கு தேரோட்டியா வராமல் வேற ஆரும் வந்திருந்தால், மகாபாரதக் கதையே மாறியிருக்கும். ஒரு காரியத்தை வெல்றதுக்கு தலைமைப்பதவிதான் முக்கியமானதெண்டில்லை, தேரோட்டி மாதிரி நல்ல வழிகாட்டியா இருந்தாலே எங்களை நம்பி இருக்கிறவையை வெல்லப் பண்ணலாம் எண்டது தான் மகாபாரதம் சொல்லுற ஒரு தத்துவம்.

இப்பிடிச் சுத்திவளைச்சு பட்சி என்ன சொல்ல வருகுதெண்டு கண்டுபிடிச்சிருப்பியள். தமிழரசுக் கட்சியின்ர தலைமைப்பதவிக்குத் தன்னோட போட்டிபோட்டு, சிறீதரன் வெண்டதும், முதல் ஆளா அவருக்கு வாழ்த்துச் சொன்னதோட 'நாங்கள் இணைஞ்சு பயணிப்பம்'எண்டு பெருந்தன்மையாச் சொன்னவர் சுமந்திரன். ஆனால் என்னதான் வெளியில இப்பிடிச் சொன்னாலும் உள்ளுக்க தோல்வியால வந்த கவலை ஒண்டு இருக்கும் தானே. கட்சிக்கு இவ்வளவு செய்தும் கடைசியில 'கட்சியே இப்பிடி வேண்டாமெண்டிட்டே'எண்டதுதான் அவரின்ர ஆதங்கம். இப்பிடி அவர் கொஞ்சம் மனதளவில சோர்ந்திருக்கேக்க கூட இருக்கிறவைதான் அவரைப் பழையநிலைக்குக் கொண்டரவேணும். ஆனால் அவையில கனபேர், 'கட்சியை விட்டு சுமந்திரன் விலகவேணும்' எண்டு பேஸ்புக்கில தாறுமாறா எழுதிக்கொண்டிருக்கினம். இப்பிடிக் கூட இருக்கிறவையே சொல்லுறதால, செயற்பாட்டு அரசியல்ல இருந்து கொஞ்சநாளைக்கு ஒதுங்கி இருக்கிறதைப் பற்றிச் சுமந்திரன் யோசிக்கிறாராம். இன்னும் சிலர் அவர் தமிழரசுக்கட்சியை விட்டு விலகி, அரசியலுக்கே முழுக்குப் போடப்போறார் எண்டும் கடுமையாக் கதைக்கினம்.

'வாற சனி,ஞாயிறு கட்சியின்ர தேசிய மாநாட்டுக்குப் பிறகு என்ன செய்யிறதெண்டு யோசிப்பம்' எண்டு தன்ர நெருங்கின வட்டத்துக்கு சுமந்திரனும் சொல்லியிருக்கிறார் எண்டு கேள்வி. என்னதான் இருந்தாலும், சுமந்திரன் செயற்பாட்டு அரசியலை விட்டுப் போறது கட்சிக்கும் நல்லதில்லை. தமிழருக்கும் நல்லதில்லை. சுமந்திரனிட்ட தமிழ்த் தேசியம் பற்றின குழப்பமான இல்லாட்டி கொழும்பு மனோநிலை இருந்தாலும், கனக்க விசயங்களில அவரின்ர அறிவும், திறமையும் தமிழாக்களுக்கு கட்டாயம் தேவை. அரசியலமைப்பு, சட்டப்பிரச்சினையள், பேச்சுவார்த்தையள் எண்ட விசயங்களில சுமந்திரன்ர பங்கு முக்கியம். அதால தலைமை கிடைக்கேலை எண்டதுக்காக ஒதுங்க நினைக்கிறது சரியில்லை.

அதோட தலைமைத்துவம் கிடைக்காட்டியும், எங்களுக்காக இந்தளவுக்கு பாடுபடுறாரே எண்டளவுக்கு இனிமேல் அவர் தமிழ்ச்சனத்துக்காக இறங்கி வேலை செய்தால், அவரில சொல்லுப்படுற சில குற்றச்சாட்டுகளையும் இல்லாமலாக்கலாமெல்லோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரக்கறி விலை தொடர்ந்து ஏற்றம்!

யாழ்ப்பாணம், ஜன. 26

**யாழ்.குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை சரிவடையாது காணப்படுவதுடன் அவற்றுக்கு கிராக்கியும் ஏற்பட்டுள்ளது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.**

தற்போது ஆலயங்களில் கும்பாபிஷேகம், தைப்பூசம் மற்றும் தைமாத சுபவைபவங்கள் என்பன இடம்பெற்று வருகின்றமையால் மரக்கறி வகைகளின் நுகர்வு அதிகரித்துள்ளது. சந்தைகளில், பயிற்றங்காய், பாகற்காய் கிலோ ஆயிரத்து 100 ரூபாவாகவும், கத்தரிக்காய் கிலோ 850 ரூபாவாகவும், தக்காளி கிலோ 750 ரூபாவாகவும், கோவா கிலோ 800 ரூபாவாகவும், பீற்றூட் கிலோ 800 ரூபாவாகவும், கரட் கிலோ 1500 ரூபாவாகவும், பச்சைமிளகாய் கிலோ 1200 ரூபாவாகவும், கீரை ஒரு பிடி 160 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-17)

## அறநெறி மாணவர் கலைநிகழ்வு இன்று

அளவெட்டி சைவவாலிப சங்கம் நடத்தும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சித் தொடர் -3 இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அளவெட்டியிலுள்ள சைவவாலிப சங்க திருவடி நிழல் மடாலயத்தில் நடைபெறவுள்ளது. (ச)



## பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஜன.26

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் புதிய அதிபராக திருமதி க.சுலபாம்பிகை கடந்த செவ்வாய்க்கிழமை சம்பிரதாய பூர்வமாகப் பதவியேற்றார்.

இவர் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் ஆவார். நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் அதிபர், நலன்விரும்பிகள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-125)

## 'பெட்டகம்' திறப்பு விழா!

யாழ்ப்பாணம், ஜன. 26

சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள தமிழியல் ஆவண சேகரிப்பு மையமான 'பெட்டகம்'திறப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம், சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநர் சி.ஆ. யோதிலிங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன் மற்றும் சோ.பரமநாதன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ப-100)

## மட்டுவில் ஆலயத்தில் புதிரெடுத்தல் வழிபாடு

யாழ்ப்பாணம்,ஜன. 26

மட்டுவில் அருள்மிகு பனையடிப் பிள்ளையார் ஆலயத்தில் வருடாந்த புதிர் எடுக்கும் வழிபாடு கடந்த செவ்வாய்க்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

ஆலயக் குருக்கள் தலைமையில் மட்டுவிலுள்ள ஆலய வயலிலிருந்து ஆலயத்துக்கு புதிர் எடுத்துவந்து விசேட பூசை வழிபாட்டுடன் புதிர் கட்டப்பட்டு பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை புதிர்ப் பொங்கல் நடைபெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-131)

## வீதியில் மதுபோதையில் இளைஞர்கள் அட்டகாசம்

உரும்பிராய், ஜன. 26

மதுபோதையிலிருந்த இரு இளைஞர்கள் வீதியால் பயணம் மேற்கொள்பவர்களுடன் பெரும் அடாவடியில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சம்பவம் உரும்பிராய்ப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இரு இளைஞர்களினதும் செயற்பாடு தொடர்பில் வீதியால் சென்ற மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸார் இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-66)

## சுன்னாகத்தில் விபத்து; முதியவருக்குக் காயம்

சுன்னாகம், ஜன. 26

சுன்னாகத்திலுள்ள ஒரு வங்கிக்கு அருகில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் காயமடைந்தார்.

இரண்டு மோட்டார்சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிய விபத்திலேயே அவர் காயமடைந்தார். (ப-66)

## போதைகளுடன் கைதான மூவருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஜன. 26



போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டையில் மாவா, கசிப்பு மற்றும் ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப்பொருள்களுடன் மூவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களை பொலிஸார் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நீதிமன்றில் முற்படுத்தியபோதே 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று பணித்தது. (ச-125)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியங்கள் சாதகமாக முடியும். உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும் வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். பிணக்குகள் நீங்கும். குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம்.

**கன்னி:** பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிரிகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். செலவு செய்யவேண்டிவரும். பணவரவு கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மனவருத்தங்கள் நீங்கும்.

## தென்மராட்சியில் நெல் அறுவடை

தென்மராட்சியில் கடந்த வருட காலபோக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை தெருக்களில் காயவிட்டு வருகின்றனர். வீதியில் பயணிப்பவர்கள் அவதானத்துடன் பயணிக்க வேண்டும் என்றும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்தனர். (ச-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இனியும் நம்புவது சரியா?

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக சிவஞானம் சிறீதரன் தெரிவுசெய்யப்பட்ட மறுநாள் கொழும்பில் இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்ட சந்தோஷ் ஜா தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். இதன்போது சி.சிறீதரனும் பங்கேற்றிருந்தார். இந்தச் சந்திப்பில் ஈழத் தமிழர்களுக்காக இலங்கை அரசாங்கத்துக்கு தங்களால் முடிந்ததைச் சொல்லிக்கொள்கின்றோம் என்கின்ற இராஜதந்திர மொழியிலிலான நழுவல் போக்கில் புதிய தூதுவர் பதிலளித்திருக்கின்றார். போர் முடிவுக்கு வந்த பின்னரான 14 ஆண்டுகளில் இந்தியா எப்படி இலங்கையைக் கையாள்கின்றது என்பதை தமிழ் மக்கள் நேரடியாகக் கண்டுகொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட பின்னர் இந்தியா முதலாவது ஆளாகக் கைகொடுத்து உதவியதும் அதற்குப் பிரதியுபகாரமாக தமிழர் தாயகத்திலிருந்து பொருளாதார நலன்களை இந்தியா உறிஞ்சிக்கொள்வதற்கான உத்தரவாதத்தையும் சிறிலங்கா அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொண்டது. இதுதான் இந்தியா. தனது நலன்களை உறுதிப்படுத்திக்கொள்வது மாத்திரம்தான் அந்த நாட்டுக்கு முக்கியம். அப்படிப்பட்ட நாடுதான் ஈழத் தமிழர்களுக்காக சிறிலங்கா அரசாங் கத்துக்கு அழுத்தம் மாத்திரம்தான் கொடுக்கமுடியும். அதற்கு அப்பால் எங்களால் எதுவும் முடியாது என்று கைவிரித்திருக்கின்றது.

இப்படிப்பட்ட சூழலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள சி.சிறீதரனோ, இந்தியத் தலைநகர் புதுடில்லியில் தமது கட்சியின் சார்பில் கிளையைத் திறந்து, புதுடில்லியின் கொள்கை வகுப்பாளர்களுக்கு எமது நியாயங்களை எடுத்துச் சொல்லப் போவதாகக் கூறியிருந்தார். இந்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்கு தமிழர்களின் தற்போதைய நிலைமை உரிய முறையில் எடுத்துச் சொல்லப்படவில்லை என்பதை தனது புதுடில்லிப் பயணத்தின்போது உணர்ந்து கொண்டதாகவும், கடந்தகாலங்களில் குறிப்பாக நல்லாட்சிக் காலத்தில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் இந்தியாவை தள்ளி வைத்தமை தவறு என்றும் சி.சிறீதரன் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கைத் தமிழர்களுக்காக போர் முடிவுக்கு வந்த பின்னரான 14 ஆண்டுகளில் எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் இந்தியா எடுத்திருக்கவில்லை. கிளிப்பிள்ளைபோல மாகாணசபை முறைமையை நடைமுறைப்படுத்துமாறு திரும்பத் திரும்ப இலங்கைக்குச் சொல்வதைத் தவிரவும் வேறு எதையும் அந்நாடு செய்யவில்லை. இதுவே யதார்த்தமாக இருக்கையில், சிறீதரன் சொல்வது எவ்வாறு சாத்தியமாகும் என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பதைப் போல இந்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்கு எம்மீதான அடக்குமுறைகளைச் சொல்வதன் ஊடாக இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்று சிறீதரன் நம்புகின்றார். ஆனால் களநிலைமையோ அதற்கு எதிர்மாறாகவே உள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரையில் தனக்கான பொருளாதார நலன்களை அந்தநாடு உறுதிப்படுத்திவிட்டது. சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் கடிவாளத்தையும் இலங்கை மீது போட்டுவிட்டனர். இதன் காரணமாகத்தான் இலங்கைக் கடல் எல்லையில் வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களுக்கு இலங்கை தடையையும் விதித்தது. இவ்வாறு தனது அனைத்துத் தேவைகளையும் முழுமைப்படுத்திக்கொண்ட இந்தியா, ஈழத் தமிழர் விவகாரத்தில் மென்போக்காக நடந்து கொள்ளத் தலைப்படுகின்றது. இவ்வாறான சூழலில் இனியும் இந்தியாவை மாத்திரம் குருட்டுத்தனமாக நம்பிக்கொண்டு காரியங்களை ஆற்றுவது சரியா என்பது மில்லியன் டொலர் கேள்வி. தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரையும் வைத்துக்கொண்டு புதிய இந்தியத் தூதுவர் கூறியதன் அர்த்தத்தை ஆழமாகப் புரிந்துகொண்டு புதியதொரு வழிமுறையைக் கடைப்பிடிப்பதே ஈழத் தமிழர்களின் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக இருக்கும்.




# ஆசிரிய வெற்றிடங்கள் 5,500 பேர் உள்ளீர்ப்பு!

## கல்வியமைச்சர் தகவல்

**கொழும்பு, ஜன. 26**

**ஆசிரியர் பற்றாக்குறையை முற்றாகத் தவிர்ப்பதற்கு புதிதாக சுமார் 5 ஆயிரத்து 500 பேரை இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று கல்வியமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.**

பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல், கணிதம், தொழில்நுட்பம் மற்றும் விசேட மொழிப் பாடங்களுக்கே அவர்கள் உள்ளீர்க்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதிக்குள் இந்த ஆசிரியர் நியமனங்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# உள்ளூர் முட்டை விலை உயர்வு

கொழும்பு, ஜன. 26

உள்ளூர்முட்டைஒன்றின் விலையை 3 ரூபாவால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

'வற்' வரி அதிகரிப்பால் உள்ளூர் முட்டை உற்பத்திச் செலவு 8 ரூபாவாக அதிகரிக்கப்பட்ட தற்கமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார். (ச-இ)

# நுண்நிதி சட்ட வரைவு உயர்நீதிமன்றில் மனு!

நுண் நிதி நிறுவன சட்டவரைவுக்கு எதிராக ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல் நிறுவனம் உயர்நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

நுண் நிதி நிறுவனங்களில் கடன் பெற்றவர்கள் உரிய தவணையில் வட்டியைச் செலுத்தாத பட்சத்தில் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தல், பாலியல் இலஞ்சம் கோருதல், உடல், உள ரீதியாக துன்புறுத்தல், அச்சுறுத்தல் ஆகியவற்றுக்கு உள்ளாகின்றனர்.

இத்தகைய செயற்பாடுகளிலிருந்து கடன்பெற்றவர்களைப்பாதுகாப்பதற்குரிய அம்சங்கள் இந்தச்சட்டத்தில் காணப்படவில்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் சில பிரிவுகளையும் இந்தச் சட்டம் மீறுகிறது என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

# பதவி வெற்றிடங்கள்

கொழும்பு, ஜன. 26

கணக்காய்வாளர் திணைக்களத்தில் கணக்காய்வு அதிகாரிகளுக்கான சுமார் 400 பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கணக்காய்வு நடவடிக்கைகளை அதிகபட்ச முகாமைத்துவத்துடன் மேற்கொள்ளவேண்டியுள்ளதால் பதவிக்குப் பொருத்தமானவர்களை விரைவில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ. பி.சி. விக்ரமரத்ன குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# மீனவர்கள் நலன் காக்க புதிய வேலைத்திட்டம்

## கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 26

மீனவர்களின் ஆரோக்கியம் மற்றும் நலன்புரி செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் 'தீவர சுவ சவிய' என்ற புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் அனைத்து மீனவர்களுக்கு முதலுதவி பயிற்சி மற்றும் மருத்துவ சான்றிதழ் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தெரிவித்தார்.

மீனவர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டு கரைக்குத் திரும்புவதால் கடும் பொருளாதார இழப்பைச் சந்திக்க வேண்டியேற்படுகின்றது. இதன் தாக்கம் மீனவர்களுக்கு மட்டுமின்றி, ஏற்றுமதி வருமானம் மற்றும் உள்நாட்டு மீன் நுகர்வுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.- என்றார். (ச-இ)

## நாளை

27.01.2024

**சனிக்கிழமை**

**தை – 13**

சுபநேரம் : 03.36 – 05.06

ராகுகாலம் : 09.36 –11.06

## நாளொரு நல்வார்த்தை

**மாணவர்களுக்கான மிக முக்கியமான பண்புகளில் ஒன்று கேள்வி கேட்பது.**

- அப்துல் கலாம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவு செய்யப்பட்ட ஊடகங்களுக்கு மட்டும் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன.26
கச்சதீவு பெருந்திருவிழாவுக்குப் பதிவு செய்யப்பட்ட ஊடகங்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என யாழ். மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.
திருவிழாவுக்கு வலையொலி மற்றும் புதிய ஊடகவியலாளர்கள் போன்றவர்களும் அனுமதிக்கப்படுவார்களா? என்று வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ப-125)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.26
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் இணுவிலிலுள்ள சங்க மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 28 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு நடைபெறும்.
சங்கத் தலைவர் கா. பீ. ஜெயவிந்தன் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களிலிருந்து தலா இரண்டு பிரதிநிதிகள் வீதம் கலந்துகொள்ளுமாறு செயலாளர் தெரிவித்துள்ளார். (ப-9)

## ஆங்கிலப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன.26
காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தால் நடத்தப்படும் மாணவர்களுக்கான ஆங்கில எழுத்துக் கூட்டல் போட்டி மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளக அரங்கில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
போட்டியில் தரம் -2, அதற்குட்பட்டவர்களான (வயது- 5 - 7) பிரிவு -1 க்கான முதல் சுற்றுப்போட்டிகள் காலை 9 மணிக்கும், தரம் - 3 தொடக்கம் தரம் - 5 வரையானோர் (வயது - 8 - 10)பிரிவு-2க்கான முதல்சுற்றுப்போட்டிகள் காலை 9.30 மணிக்கும், தரம்- 6 தொடக்கம் தரம் - 8 வரையானோர் (வயது - 11 - 13) பிரிவு -3க்கான முதல் சுற்றுப் போட்டிகள் மு.ப. 10 மணிக்கும், தரம்- 9 தொடக்கம் தரம் - 11 வரையானோர் (வயது - 14 -16) பிரிவு-4க்கான முதல் சுற்றுப்போட்டிகள் மு.ப. 10.30 மணிக்கும் இடம்பெறவுள்ளன.
இந்தப் போட்டியில் பங்குபற்ற விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்துக்கு வந்து போட்டியில் கலந்துகொள்ள வேண்டும் என்று மறுமலர்ச்சி மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (ப)

### 10 ஆண்டுகளாக

# போக்குவரத்து வசதியற்று புதுக்குடியிருப்பு மக்கள்!

**முல்லைத்தீவு, ஜன. 26**
**முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு நகரத்திலிருந்து புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம் செல்வதற்கான போக்குவரத்து வசதியின்மையால் மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர்.**

புதுக்குடியிருப்பு நகரத்திலிருந்து ஒரு கிலோ மீற்றருக்கு அதிகமான தூரத்தில் இரணைப்பாலை வீதியிலுள்ள பிரதேச செயலகத்துக்குச் செல்வதற்கு நடந்தே செல்லவேண்டியுள்ளது.
இந்த நிலைமை கடந்த 10 ஆண்டுகளாகத் தொடர்கின்றது.
பிரதேச செயலகத்தை இலக்காகக் கொண்டு உள்ளூர் பஸ்சேவைகள் இடம்பெறவேண்டும் என்று பல தடவைகள் பிரதேச செயலகக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டபோதும் இதுவரை நடவடிக்கையில்லை.
எனவே உரிய அதிகாரிகள் முல்லைத்தீவு நகரிலிருந்து நடைபெறுகின்ற உள்ளூர் பேருந்துச் சேவைகள் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம்வரை சென்று திரும்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்- என்றனர். (ச-13)



## சதுரங்கப்பயிற்சி

உரும்பிராய், ஜன.26
உரும்பிராய், மேம்பாட்டு ஒன்றியம் நடத்தும் இலவச சதுரங்கப் பயிற்சிநெறி உரும்பிராயில் அமைந்துள்ள மேம்பாட்டு ஒன்றியத்தின் தலைமைச் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் ஆரம்பமானது.
இந்தப் பயிற்சிநெறியில் உரும்பிராய் பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் - 3 முதல் தரம் -10 வரையிலான மாணவ, மாணவிகள் பங்குபற்ற முடியுமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். மேலதிக தகவல்களுக்கு 021222 9121 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-66)

## ஒப்பந்த வேலைகளுக்கான விலை நிர்ணயக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 26
ஒப்பந்த வேலைகளுக்கான விலை நிர்ணயக் குழுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில்நேற்றுமுன்தினம்புதன்கிழமை நடைபெற்றது.
மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் தொழிலாளர் கூலி, வாகன வாடகை, கட்ட மூலப்பொருள்கள் உள்ளிட்டவை தொடர்பில் ஆராயப்பட்டன.
தொடர்ந்து ஒப்பந்த வேலைகளுக்கான விலைகள் தீர்மானிக்கப்பட்டன.
கலந்துரையாடலில் மேலதிக மாவட்டச் செயலர், திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட பொறியியலாளர், நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர், திணைக்களங்களின் தலைவர்கள், திணைக்களங்களின் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-113)

## டெங்கு களப் பரிசோதனை

சாவகச்சேரி, ஜன.26
தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கிராம அலுவலர் தலைமையில் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் டெங்கு களப் பரிசோதனைகள் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
அந்தந்த கிராம மட்ட அலுவலர்களான சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், பொது சுகாதார பரிசோதகர், குடும்ப நல அலுவலர் ஆகியோர் வீடு வீடாகச் சென்று டெங்கு கட்டுப்பாட்டு களப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் சுகாதாரத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் களப் பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

## கலைஞர்களுக்கு ஊக்குவிப்பு நிதி


யாழ்ப்பாணம், ஜன.26
யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் வாழும் கலைஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புகள் மற்றும் இலத்திரனியல் வெளியீடுகளை ஊக்குவிப்பதற்கான உதவியை வழங்குவதற்கு வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் பண்பாட்டு அபிவிருத்தி செயற்றிட்டத்தின் ஊடாக ஊக்குவிப்புநிதி வழங்கும் நடவடிக்கையினை கலாசாரப் பேரவை மேற்கொண்டுள்ளது.
இந்தத் திட்டத்துக்கு தரமதிப்பீட்டுக்குழுவின் தீர்மானத்துக்கமைய கலைஞர்கள் தெரிவு செய்யப்படுவர்.
இதற்குத் தகுதியானவர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்புகொள்ள முடியும் என்று யாழ்ப்பாண பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (ப)



## முல்லை. மேழிவனத்துக்கு மேம்பாலம் கோரும் மக்கள்


முல்லைத்தீவு, ஜன.26
ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மேழிவனம் கிராமத்தில் உள்ள தாழ்பாலத்தை மேம்பாலமாக மாற்றி போக்குவரத்தை இலகுபடுத்தவேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இந்தக் கிராமத்தில் சுமார் 30 குடும்பங்கள் வசிக்கின்றன. மழை காலத்தில் ஆமையன் ஆறு வழியாக பாயும் வெள்ளம் தாழ்பாலத்தை ஊடறுத்துச் செல்கிறது. இதனால் கிராமத்திலிருந்து மாங்குளம் - ஒட்டுசுட்டானுக்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்படுவதால் மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாக நேரிடுகிறது.
எனவே உரிய அதிகாரிகள் குறித்த தாழ்பாலத்தை மேம்பாலமாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுன்னாகம், மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் (வடலி அம்மன்) ஆலய வருடாந்த மஹோற்சவத் தேர்த் திருவிழா பல நூற்றுக் கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ப-66)

யாழ். மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் யாழ். வலய நாடாளுமன்ற செயலமர்வு உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் மாணவர் நாடாளு மன்றத்தேர்தலுக்கும், தேசிய ரீதியான தேர்தலுக்குமான வேறுபாடு தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. வாக்களிப்பது உரிமை மட்டுமல்ல கடமை எனவும் வலியுறுத்திக் கூறினார். (ப)



வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் பாரம்பரிய கரவலைத் தொழிலின் 2024ஆம் ஆண்டுக்கான நாள் வலைத்தொழில் நாகர்கோவிலில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது. (ப-100)






மருதங்கேணி, பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட செம்பியன்பற்று தெற்கு மாதர் கிராம சங்கத்தின் தைப்பொங்கல் விழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் மாதர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், சமூர்த்தி உத்தியோகத்தர், பயனாளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-159)



ஜே/110 திருநெல்வேலி மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் டெங்கு விழிப்புணர்வுக் கூட்டம் சமூக மருத்துவப் பிரிவின் மருத்துவர் கயலினியின் வழி காட்டுதலில் கடந்த செவ்வாய்க்கிழமை கிராம மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் அந்தப்பகுதி மக்களின் பங்களிப்புடன் நடைபெற்றது. (ப-66)



வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்துக்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட திருமஞ்ச வெள்ளோட்ட விழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ப-66)



உடுவில் பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளராக பாலசுந்தரம் ஜெயகரன் கடந்த புதன்கிழமை காலை பொறுப்பேற்றுக் கொண்டார். இதேவேளை, உடுவில் பிரதேச செயலகத்தில் 2020 ஆம் ஆண்டு முதல் பணியாற்றிய தவச்செல்வம் முகுந்தன் கரைச்சிப் பிரதேச செயலாளராக இடமாற்றம் பெற்றுள்ளார். (ப-66)



மன்னார் ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பொங்கல் விழாவும் பரிசளிப்பு விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாடசாலை வளாகத்தில் நடைபெற்றன. (ப-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லப்பட்ட ஊடகர்களுக்காக யாழ்ப்பாணத்தில் கறுப்பு ஜனவரி

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்காக யாழ்ப்பாணத்தில் நேற்று கறுப்பு ஜனவரி நினைவுதினம் கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் சுதந்திர ஊடக இயக்கத்தினருடன் இணைந்து இந்த நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை 2 மணி முதல் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்பொழுது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவுகூர்ந்து ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது.

தொடர்ந்து, அண்மையில் நிறைவேற்றபட்ட நிகழ்நிலை காப்புச்சட்டம் தொடர்பான பாதகமான விளைவுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.


குறித்த நிகழ்வில் சிவில் சமூகப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-125)


## வேலையாட்கள் தேவை

அரைக்கும் ஆலையில் மா அரைத்து, வறுத்து, பொதி செய்ய, தேங்காய் எண்ணெய் ஊற்ற, ஆலையை நிர்வகிக்கத்தக்கவர்கள்.

T.P: 077 772 2215


## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 11 . 1941 — இறப்பு 20 . 01 . 2024

### சுப்பிரமணியம் நாகரெத்தினம் (முத்துத்தம்பி)

புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 6 ஆம் வட்டாரம் மற்றும் 103, சட்டநாதர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகரெத்தினம் (முத்துத்தம்பி) அவர்கள் கடந்த 20.01.2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (செல்லையா) அன்னப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், சதாசிவம் இரத்தினம் தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சுதர்சன் (சுவிஸ்), சுதாகரன், சுகந்தன், சுசிதரன் (கனடா), சுபாஜினி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சங்கீதா (சுவிஸ்), தேவகி (ஆசிரியர்), செல்வி, போல் நிர்மலதாசன் (நோர்வே) ஆகியோரின் மாமனாரும், சுஜிதா, உமாலயா, மாதவன், சதுர்யா, விவேகா, சேரன், மதுமிதா, ஆரண்யா, கரிஷ்மா, ஸ்ரினா, ஸ்ரியான், சோபியா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான சற்குணம், கனகம்மா, தர்மபூபதி மற்றும் முத்தம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், தம்பு, தர்மலிங்கம், சண்முகலிங்கம் மற்றும் சற்குணநாதன், காலஞ்சென்றவர்களான செல்வநாதன், தெய்வேந்திரன் மற்றும் பாக்கியலட்சுமி, பஞ்சரத்தினம், பத்மநாதன், மகாதேவன், சகாதேவன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (28.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**103, சட்டநாதர் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
**021 222 9313**

(CS 53684) (N-1)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## உள்ளூர் உற்பத்தி பொருட்களின் கொள்வனவு

பனை அபிவிருத்திச் சபையானது உள்ளூர் பிரதேச உற்பத்தியாளர்கள் மற்றும் முயற்சியாளர்களின் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்குடன் உள்ளூர் உற்பத்திப் பொருட்களினை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளது.இதன் அடிப்படையில் பின்வரும் உள்ளூர் பிரதேச உற்பத்திகளை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்கள் தங்களின் உற்பத்தி சம்பந்தமான விபரங்கள் பிரதானமாக, அலகு ஒன்றின் விலையினை குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

| | | |
|---|---|---|
| நெல்லிகிரஸ் | இடியப்ப உரல் | மர வகை உற்பத்திகள் |
| நல்லெண்ணெய் | பலகார உரல் | தானிய உற்பத்திகள் |
| அரிசிமா வகை | முறுக்கு உரல் | பேக்கரி உற்பத்திகள் |
| மிளகாய் தூள் வகை | வாசனைத் திரவியங்கள் | மற்றும் ஏனைய உணவு சார்ந்த பெறுமதி சேர் உள்ளூர் உற்பத்திகள் |

**முகவரி :**

**கொள்வனவுக்குழு,**
**பனை அபிவிருத்திச் சபை,**
**கண்டிவீதி, கைதடி,**
**யாழ்ப்பாணம்.**

தொடர்புகளுக்கு
**077 772 1334**
**077 252 2716**
**077 662 4408**

(cr.41628) (N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 11 . 1960 — மறைவு 25 . 01 . 2024

### பத்மராணி தனபாலசிங்கம்

கோண்டாவில கிழக்கு, ஞானவைரவர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மராணி தனபாலசிங்கம் அவர்கள் நேற்று (25.01.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான இராசா இரத்தினம் தம்பதியரின் மருமகளும், தரணிகா (ஜேர்மன்), கேமதர்ஷன் (ஆசிரியர், முல்லைத்தீவு மகா வித்தியாலயம்), இந்துஷானி (QA - Engineer, Hemnette) ஆகியோரின் அன்புத் தாயும், சபேசனின் (ஜேர்மன்) அன்பு மாமியும், தவமலர், சற்குணம் (அமரர்), கமலாதேவி, சுசீலா (அமரர்), சந்திரா, விஜயகுமாரி (அமரர்), வசந்தகுமாரி, ஜெயக்குமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கண்மலர் (அமரர்), நேசமலர் (அமரர்), பாலச்சந்திரன், கலாவல்லி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சதுஷன் (ஜேர்மன்), சஹானா (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ரகுபதி, 3ம் குறுக்கு வீதி,**
**இணுவில் கந்தசுவாமி கோவிலடி,**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 751 5307**

(CS 27778) S-1

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 21 . 10 . 1975 — உதிர்வு 24 . 01 . 2024

### திருமதி அலன் கத்தரின் கவிதா மார்க் வெஸ்லி

(ஆசிரியர் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

**மீளாத் துயில் கொண்டு எம்மை**
**ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றதேன்?**
**கலையாத நினைவுகளுடனும்**
**கனத்த இதயத்துடனும்-எம்**
**கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்**

**இவரின் பிரிவால் துயருற்றிருக்கும்**
**குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த**
**அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு**
**இவரின் ஆன்மா நித்திய சாந்தியடைய**
**இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**பாடசாலைச்சமூகம்**
**யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.**

(CS 41634) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலை நிகழ்வும் கௌரவிப்பும்

வரணிக் குடும்ப முன்பள்ளிகளின் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் கலை நிகழ்வும், கௌரவிப்பும் வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் வரணிக் குடும்ப இணைப்பாளர் திருமதி லோ.கேதிகா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளரும், முன்பள்ளி மேற்பார்வையாளருமான திருமதி ம.இராஜலட்சுமி, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய ஓய்வுநிலை முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.சறோசாதேவி, தென்மராட்சி கொத்தணி பொது முகாமையாளர் க. அருட்செல்வம், முன்னாள் பிரதேசசபை உறுப்பினரும், வரணி மண்ணின் சமூக சேவையாளருமான சி.பிரபாகரன், கௌரவ விருந்தினர்களாக சர்வதேச லயன்ஸ் கழகப் பிராந்திய தலைவர் லயன் இ.கோகிலன், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும், மாணவர்கள் பதக்கம் அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கலும் இடம்பெற்றன.

(ப-159)

மன்னார், மடு தேவாலய மாதாவுக்கு மணிமுடி சூடிய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மடு மாதாவின் திருச்சொரூபம் மறைமாவட்ட பங்குகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பயணம் அண்மையில் வவுனியா, இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தை வந்தடைந்தது. இந்தப் பவனியில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து வரவேற்பு நடனம், வெடிகள், பனர்கள், ஒளி வெளிச்சங்கள் எனப் பல்வேறு விதங்களில் வரவேற்றனர். (ப-18)





கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தில் மணவாளக்கோல திருவிழா அண்மையில் சிறப்புற இடம்பெற்றது. சுவாமி பூந்தண்டிகையில் வீதிவலம் வந்து அருள்பாலித்தார். (ச-17)



வடமராட்சி வடக்கு, பிரதேச செயலக மரம் நடும்விழா வடமராட்சி வடக்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

(ப -27)




ரோட்டரிக் கழகத்தின் உலகளாவிய தலைவருடன் மன்னார் ரோட்டரிக் கழகத் தலைவர் சந்திப்பு கொழும்பிலுள்ள 'சங்கிரிலா' ஹோட்டலில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ப-213)

# வேளாண்மை பயிலரங்கம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கம், காந்தி நிலையம் இணைந்து நடத்திய ஒரு நாள் சிறப்பு இயற்கை வேளாண்மை பயிலரங்கம் காந்திக்கிராமம், கோணாவில் பகுதியில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் தமிழ்நாடு இயற்கை வேளாண்மை விஞ்ஞானி பாமயன் மற்றும் தமிழ்நாடு இயற்கை வேளாண் பண்ணை ஆலோசகர் ராஜகணேஷ், வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், காந்தீயம் ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி, ஓய்வுபெற்ற அதிபர் செ.சுப்பிரமணியம், காந்தி சேவா சங்க பொதுச் செயலாளர் மா.பேரம்பலம், காந்தி நிலையத் தலைவர் சி.சிவநேசன் மற்றும் விவசாயிகள், பொதுமக்கள், புதிய வெளிச்சம் அமைப்பினர், காந்தி சேவா சங்க நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ப-159)





# பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.26

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சிறுதானியப் பொங்கல் விழா சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலைய முன்றிலில் 'மாலை இராசபோசனம்' என்னும் கருப்பொருளில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசனின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்துக் கற்கைகள் பீடத்தின் பேராசிரியர் கலாநிதி விக்னேஸ்வரி பவநேசன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாண மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொதுமுகாமையாளர் பொ. செல்வராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

விழாவில் உறியடி, வழுக்கு மரம் ஏறுதல், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன.

(ப-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குளம் நகர அபிவிருத்தி; கோரிக்கை விடுக்கும் மக்கள்

முல்லைத்தீவு, ஜன.26
முல்லைத்தீவு, மாங்குளம் நகரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென இந்தப் பகுதி பொது அமைப்புகள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றன.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக இடம்பெற்ற போர் காரணமாக ஏ-9 சாலையில் பெரும் அழிவுகளை மாங்குளம் எதிர்கொண்டது.

போர் நிறைவு பெற்று 14 ஆண்டுகள் கடந்த நிலையிலும் மாங்குளம் பேர் சொல்லுமளவுக்கு அபிவிருத்தியடையவில்லை.

மாங்குளம் நகரத்திலிருந்து துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளின் கிராமங்களுக்குப் பேருந்துகள் பணியில் ஈடுபடும் என மாகாண சபையிலும், மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், பிரதேசசபைகள் என்பவற்றிலும் பல தடவைகள் தீர்மானங்கள் எடுக்கப்பட்ட போதிலும் கடந்த பத்தாண்டு களுக்கு மேலாக அவை இடம் பெறவில்லை.

மாங்குளத்தில் அபிவிருத்தி கூடுதலாக இடம்பெற்றால் கிராம மக்கள் பெரும் நன்மையடைவார்கள் எனப் பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன. (ப-13)





# சங்குவேலியில் புதிரெடுப்பு


யாழ்ப்பாணம், ஜன.26
தைப்பூசத்தை முன்னிட்டு வயலில் புதிர் எடுத்கும் சம்பிரதாய நிகழ்வு யாழ்ப்பாணம் சங்குவேலியில் நேற்று இடம்பெற்றது.
சங்குவேலி வயலில் விளைந்திருந்த நெற்கதிர்களை அந்தப் பிரதேச விவசாயிகள் பாரம்பரிய முறைப்படி மாட்டு வண்டியில் சென்று சூரியனுக்கு வணக்கம் செலுத்தி நெல்லை அறுவடை செய்தனர்.
அவற்றை மாட்டுவண்டிலில் ஏற்றி உடுவில், மருதனார்மடம் ஊடாக எடுத்து வந்து இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு காணிக்கையளித்தனர். (ச-27)

# 'ஜிகாதி'களுக்கு தடைவிதிப்பேன்

## ட்ரம்ப் தெரிவிப்பு



கொழும்பு, ஜன.26
"நான் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் 'ஜிகாதிகள்' அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடை விதிப்பேன்'' என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.
தேர்தல் பரப்புரை ஊர்வல மொன்றில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"நீங்கள் இஸ்ரேலை நிர்மூலமாகச் சொல்கிறீர்களா, நீங்கள் அமெரிக்காவை வெறுக்கிறீர்களா நீங்கள் அமெரிக்காவுக்குள் வரவேண்டாம். பைடனின் ஆட்சியில் மில்லியன் கணக்கான சட்டவிரோத குடியேறிகள் அமெரிக்காவுக்குள் பிரவேசித்துள்ளனர். எனவே நான் பதவிக்கு வந்தால் இவர்களைத் திருப்பி அனுப்புவேன்" என்றும் ட்ரம்ப் தெரிவித்தார். (ச-6)



# முஸ்லிம்களை பாதுகாக்கவும்

## பாகிஸ்தான் கோரிக்கை

இஸ்லாமபாத், ஜன. 26
இந்தியாவிலுள்ள முஸ்லிம்களைப் பாதுகாக்குமாறு பாகிஸ்தான் வெளி விவகார அமைச்சு கோரியுள்ளது.
அயோத்தியில் பிரமாண்டமாக நடைபெற்ற இராமர் கோயில் குடமுழுக்கு நிகழ்வு தொடர்பாகவே பாகிஸ்தான் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
இந்தியாவிலுள்ள மசூதிகளைப் பாதுகாக்குமாறு ஐ.நா.விடமும் மேற்குலக நாடுகளிடமும் பாகிஸ்தான் கோரிக்கை விடுத்துள்ளது.
இந்திய ஜனநாயகத்தில் மத பன்முகத் தன்மை இல்லை எனவும் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. இந்தியாவில் இந்து பெரும்பான்மை தேசிய அரசியல் எழுச்சியுற்று வருவதாகவும் பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது. (ஒ-6)

# அச்சுறுத்தும் சட்டவரைவு

## இலங்கை திருச்சபையின் யாழ்.குரு முதல்வர் ஆதங்கம்

கொழும்பு, ஜன.26
அரசாங்கம் முன்வைக்கவுள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு எந்தளவுக்கு எமது உரிமைகளைத் தடுக்கிறதோ அந்தளவு டிஜிற்றல் பொருளாதார வளர்ச்சிக்கு குந்தகமாக அமையும்.
- இவ்வாறு யாழ். குருமுதல்வர் பணியகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இலங்கைத் திருச்சபையின் யாழ்.குரு முதல்வர் செல்வன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
டிஜிற்றல் பொருளாதாரத் தொழில் வாய்ப்புகளை நாம் தற்போது வாழ்வாதாரமாக கையிலெடுத்துள்ளோம். இதற்கு நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு அச்சுறுத்தலாக வரப்போகின்றது.
எங்கள் உரிமைகளை இந்தச் சட்டவரைவு தடுப்பதுடன் மனிதத்துடன் வாழ்வதற்கும் அச்சுறுத்தலாக அமையும் என்பது தெட்டத் தெளிவாகப் புலப்படுகிறது- என்றார். (ச-66)

# நெல் கொள்வனவின்போது நிறுவைத் தராசில் மோசடி!

## வவு. அரிசி ஆலை உரிமையாளர் சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

வவுனியா, ஜன.26
நெல் கொள்வனவாளர்கள் விவசாயிகளிடமிருந்து நெல்கொள்வனவு செய்யும்போது நிறுவைத் தராசுகளூடாக மோசடியில் ஈடுபடுகின்றனர். விவசாயிகள் இதுகுறித்து அவதானத்துடன் செயற்படவேண்டும்.
- இவ்வாறு வவுனியா மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர் சங்கத் தலைவர் சி. விவேகானந்தன் சுட்டிக் காட்டியுள்ளார்.
வவுனியாவில் விவசாயிகளிடம் நெல் கொள்வனவு செய்யவரும் வெளி மாவட்ட நெல் கொள்வனவாளர்கள் மற்றும் உள்ளூர் நெல் கொள்வனவாளர்கள் இந்த மோசடியில் ஈடுபடுகின்றமை தெரியவந்துள்ளது. தராசில் இருக்கும் மேல்பகுதியை மாற்றி வைப்பதன் ஊடாக இரண்டு மூடைகளில் சுமார் 15 கிலோ வீதம் விவசாயிகள் நஷ்டமடைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே விவசாயிகள் இந்த மோசடியாளர்களிடம் ஏமாறாது நெல்லை விற்பனை செய்யும்போது அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ச-110)

# பொலிஸில் முறைப்பாடு செய்தவர் வாள்வெட்டுக்கு இலக்கானார்

பருத்தித்துறை, ஜன. 26
கொள்ளை தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து வீடுதிரும்பிய இளைஞர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
அல்வாயில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
முத்துமாரியம்மன் கோவிலடி அல்வாய் வடக்கைச் சேர்ந்த ஜெயக்கொடி கார்த்திபன் (வயது-30) என்ற இளைஞரே வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
குளிர்களி விற்பனை நிலையத்தின் நடமாடும் சேவையில் ஈடுபடும் வாகனத்தில் அவர் விற்பனையில் ஈடுபட்டிருந்தார் நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் மனோகரா விளையாட்டு மைதானத்துக்கு அருகாமையில் குளிர்களி வாங்குவது போல் பாசாங்கு செய்த இருவர் இளைஞரின் தொலைபேசி மற்றும் பணப்பை என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பில் அன்றைய தினம் மாலை 6.30 மணியளவில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது வாள் வெட்டு நடத்தப்பட்டுள்ளது.
அல்வாய் முத்துமாரியம்மன் கோவில் பகுதியில் வைத்து இரவு 7.30 மணியளவில் வழிமறித்த 15 பேர் கொண்ட குழுவினரே அவரை சுற்றிவளைத்து வாளால் வெட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இறந்த பின்னும் அவதூறு

கொழும்பு, ஜன. 26

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, நேற்று இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் உயிரிழந்த நிலையில், அவருக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் அவதூறுகள் பரப்பப்பட்டு வருகின்றன.

ராஜபக்சவின் நெருங்கிய சகாவான சனத் நிஷாந்தவின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறுபட்ட எதிர்மறைக் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், அவற்றை அங்கீகரிக்கமுடியாது என்றும் அது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ம)

# வருடாந்த இடமாற்றங்கள் துரிதப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஜன. 26

வருடாந்த இடமாற்றங்களின் கீழ் 2024 ஆம் ஆண்டுக்கான இடமாற்றங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு பொதுச்சேவை ஆணைக்குழு பணித்துள்ளது.

முன்னுரிமை இடமாற்றத்தின்கீழ் வழங்கப்பட்ட சில இடமாற்ற சுழற்சிகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும், அதனால் சம்பந்தப்பட்ட இடமாற்ற சுழற்சிகளில் உள்ள ஏனைய உத்தியோகத்தர்களுக்கு பாரபட்சம் காட்டப்படுகிறது என்றும் அரச சேவை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## அமைச்சர்...

சாரதி படுகாயம் அடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்துக்கொண்டிருந்த சனத் நிஷாந்தவின் வாகனம், அதிகாலை 2 மணியளவில், முன்னால் சென்றுகொண்டிருந்த கொள்கலன் வாகனத்துடன் மோதி, பின்னர் பாதுகாப்பு வேலியில் மோதியதிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து வாகனத்தில் இருந்த மூவரும் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு றாகம மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், சனத் நிஷாந்தவும் அவரது மெய்ப்பாதுகாவலரும் உயிரிழந்தனர். சாரதி தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வடமேல் மாகாணசபை அமைச்சராக இருந்த சனத் நிஷாந்த 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். கடந்த பொதுத்தேர்தலிலும் வெற்றிபெற்றார். நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சராகச் செயற்பட்டு வந்தார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்விலும் சனத் நிஷாந்த பங்கேற்றிருந்தார். குருநாகல் மற்றும் புத்தளம் பகுதியில் நடைபெற்ற இரு திருமண நிகழ்வுகளில் பங்கேற்றுவிட்டு மீண்டும் கொழும்பு நோக்கி வருகையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

தெற்கு அரசியலில் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாகவே சனத் நிஷாந்த வலம் வந்தார். 'அரகலய' காலத்தில் 'கோத்தா கோ கம', 'மைனா கோ கம' போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் சூத்திரதாரிகளில் ஒருவர் என இவர்மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## நாடு...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்று படிப்படியாக நாடு இயல்பு நிலைக்குத் திரும்பிகொண்டிருக்கிறது. இன்று தட்டுப்பாடுகள் இல்லை. ஆனால் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் ஏற்படும் பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. தற்போது அந்த நிலையில் இருந்து படிப்படியாக முன்னேறி வருகிறோம்.

வங்குரோத்து நிலையில் இருந்த இலங்கையின் பொருளாதாரம் தற்போது மீண்டு வந்துள்ளதாக சுவிற்சர்லாந்து விஜயத்தின்போது உலகத் தலைவர்களிடம் தெரிவித்தேன். அவர்களில் பலர் இவ்வளவு குறுகிய காலத்தில் நாம் அடைந்திருக்கும் முன்னேற்றம் ஆச்சரியம் அளிப்பதாக தெரிவித்தனர்.

நாங்கள் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளோம், ஆனால் எங்களின் வருமானம் போதுமானதாக இல்லை. எனவே, நாட்டின் வருமானத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. அதனால்தான், துரதிர்ஷ்டவசமாக, வற்வரியை வசூலிக்க வேண்டியேற்பட்டது. இப்போது நாம் எதிர்மறை பொருளாதாரத்துக்குப் பதிலாக நேர்மறை பொருளாதாரத்தை நோக்கி நகர்கிறோம்.

புதிய தொழில்துறைகள் மற்றும் புதிய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கி மக்களுக்குத் தொழில் வாய்ப்பை வழங்க வேண்டும். அதற்கான தகுந்த சூழலை உருவாக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளோம். நாடு முழுவதும் பியகம முதலீட்டு வலயம் போன்ற் முதலீட்டு வலயங்களை உருவாக்கி நாட்டின் பொருளாதார வேகத்தை பத்து மடங்கு அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம் - என்றார். (அ-ம)

## நிகழ்நிலைக்...

நிகழ்நிலைக் காப்புச்சட்டம் தொடர்பாக, சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய ஆய்வாளர் ருவான் பத்திரண வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

எதிர்க்கட்சியினதும் ஆர்வக்குழுக்களினதும் எதிர்ப்பையும் மீறி நிகழ்நிலைக் காப்புச்சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சமூக வலைத்தளத்தில் பதிவுகளை மேற்கொள்ளும் குற்றத்துக்காக ஒருவருக்கு ஐந்து வருடங்கள் வரை சிறைத்தண்டனை கிடைக்க இந்தச் சட்டம் இடமளிக்கின்றது. இணையக் குற்றங்கள், சிறுவர் துஷ்பிரயோகம் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கும் நோக்குடனே இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, ஆசிய இணைய கூட்டமைப்பு, சர்வதேச நீதிமன்றம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் போன்றன இந்தச் சட்டத்திலுள்ள சில பிரிவுகளைப்பற்றி சுட்டிக்காட்டியுள்ளன.

இந்தச் சட்டம் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு ஏற்ப அமையவில்லை. கருத்துச்சுதந்திரம், தனிநபர் சுதந்திரம் என்பவற்றைக் கடுமையாகப் பாதிக்கிறது. அத்துடன் இணையப் பாதுகாப்புக் குழுவுக்கு அளவு கடந்த அதிகாரத்தை அளிக்கிறது.

இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கிய வேளையில் மக்கள் சமூக ஊடகங்கள் வாயிலாக குரல் கொடுத்தார்கள். இந்தச்சட்டம் எதிர்க்கருத்துகளை இல்லாமல் செய்கிறது. அத்துடன் அதிகாரத்திலுள்ளவர்கள் இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தவும் வழி வகுக்கிறது - என்றுள்ளது. (அ-ம-6)

## கூட்டு...

மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்திலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:-

'தமிழ்நாடு, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அண்மைக்காலமாக இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்து இடம்பெறுவது கவலையளிப்பதாக உள்ளது. இத்தகைய போக்கு பதற்றமான சூழ்நிலையை உருவாக்கும் என்பதால், இதில் மத்திய அரசு உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தொடர் கைது நடவடிக்கைகள், தமிழ்ச் சமூகத்தின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பறிப்பதோடு, மீனவ மக்களிடையே அச்சத்தையும், நிச்சயமற்ற சூழலையும் உருவாக்கியுள்ளன. இந்தக் கைதுகள் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவச் சமூகங்களின் கலாசார மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பை அச்சுறுத்தும் வகையில் உள்ளன.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண உரிய தூதரக வழிமுறைகளைப் பின்பற்றி தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இந்தியா-இலங்கை நாடுகளுக்கிடையேயான கூட்டு நடவடிக்கைக் குழுவை அமைப்பதன் மூலம் இது சாத்தியமாகும் - என்றுள்ளது. (அ-ம)

## நிகழ்நிலைச் சட்டம்...

மக்களினதும், ஊடகங்களினதும், சமூகக் கட்டமைப்புகளினதும் கருத்துகளைக் கண்டுகொள்ளப்படாமல் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தச் சட்டம், மக்களின் உரிமைகளை அவர்களின் கருத்துச் சுதந்திரத்தை நசுக்காமல் இருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சட்டத்தால், இலங்கை டிஜிற்றல் துறைசார்ந்த முதலீடுகள் பாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-ம-6)

## ஸ்டாலின்...

இது தொடர்பில் ஊர்காவற்றுறைக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தின் செயலாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்ததாவது:-

இதுவரை மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அக்கறையற்றுச் செயற்பட்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அண்மைக்காலமாக இலங்கைக் கடற்பரப்பில் கைதாகும் இந்திய மீனவர்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கின்றார். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்குக் கடிதங்களை அனுப்புகின்றார். இவையெல்லாம் தேர்தலை இலக்குவைத்து அவர் முன்னெடுக்கும் நாடகம்தான்.

இலங்கைக் கடற்பரப்பில் வெளிநாட்டு மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதை முதலில் நிறுத்த வேண்டும். 2009ஆம் ஆண்டு ஈழப்போர் இடம்பெற்றது முதல் இன்றுவரை எங்களுடைய இனப்பிரச்சினைக்காகவும், மீனவப் பிரச்சினைக்காகவும் குரல்கொடுக்காத மு.க.ஸ்டாலின் தற்பொழுது எதற்காக கூட்டுக் கடற்றொழில் முயற்சி தொடர்பில் பேசுகின்றார். எம்மை வைத்து அவர் மேற்கொள்ளும் தேர்தல் நாடகத்தை முதலில் நிறுத்திக்கொள்ள வேண்டும் - என்றார். (அ-ம-125)

## இளைஞரைக்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

தனது தந்தையுடன் இளைஞர் ஒருவர் பயணித்துக்கொண்டிருந்தவேளை, மோட்டார்சைக்கிளில் வந்த குழுவொன்று தமது கைத்தொலைபேசியில் இருந்த ஒளிப்படத்தைக் காட்டி, 'இது நீதானே?' என வினவியுள்ளது. அதற்கு இளைஞர், 'ஆம்' என்று தெரிவித்ததையடுத்தே, அவரை இழுத்து தமது மோட்டார்சைக்கிளில் ஏற்றிக்கொண்டு செல்ல அந்தக் குழுவினர் முயன்றுள்ளனர். இளைஞரும் அவரின் தந்தையாரும் அபயக்குரலெழுப்பியதையடுத்து, அந்தப் பகுதியில் ஒன்றுகூடிய மக்கள் அந்தக் குழுவை மடக்கிப்பிடிக்க முற்பட்டுள்ளனர். இதன்போது இருவர் தப்பிச்சென்றுள்ளனர். ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-66)

## பாகிஸ்தான்...

பணத்தைச் செலுத்த முற்பட்ட சமயம் அவர்கள் மீது கடைக்காரருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து கடையின் உரிமையாளர் விசாரணை செய்ய முற்பட்டபோது அவருடன் வருகைதந்த சக பாகிஸ்தான் பிரஜை தப்பியோடியுள்ளார்.

யாழ்ப்பாணப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில் குறித்த சந்தேகநபரான பாகிஸ்தான் நாட்டுப் பிரஜை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்குவைத்து விசாரணை செய்யப்பட்டார். இதன்போது அவர் பாகிஸ்தானில் இருந்து இலங்கை வந்தவர் என்பதும், யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாகவுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்துள்ளார் என்பதும் தெரியவந்தது. தப்பியோடியவரும் பாகிஸ்தான் பிரஜை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-125)

## துப்பாக்கி...

வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் 33 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-19)


## நிஷாந்தவுக்கு...

முடிகிறது. 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலின் பெறுபேறுகளின் பிரகாரம், பொதுஜன பெரமுனவில் புத்தளம் மாவட்டத்தில் விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட வேட்பாளர்களின் பட்டியலில் சனத் நிஷாந்தவுக்கு அடுத்தபடியாக ஜகத் பிரியங்க உள்ளார். இவர் 45 ஆயிரத்து 272 வாக்குகளைப் பெற்றுக்கொண்டார். இதையடுத்தே வெற்றிடமாகியுள்ள சனத் நிஷாந்தவின் இடத்துக்கு ஜகத் பிரியங்க நியமிக்கப்படவுள்ளார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தனின் பெருமஞ்ச திருப்பவனி





யாழ்ப்பாணம், ஜன. 26

வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் கந்தசுவாமி கோவிலின் தைப்பூசப் பெருமஞ்சத் திருவிழா நேற்று வியாழக்கிழமை இரவு ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்கு பற்றுதலுடன் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

நேற்று மாலை 6 மணியளவில் வசந்த மண்டபப் பூசை ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் உள்வீதி உலா வந்தார். இரவு 7 மணியளவில் ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் நூற்றாண்டுபழைமை வாய்ந்த உலகப் பெருமஞ்சத்தில் எழுந்தருளினார். விசேட தீபாராதனை வழிபாடுகளைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகாராக் கோஷம் முழங்க இரவு 7.15 மணியளவில் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட உலகப் பெருமஞ்ச திருப்பவனி ஆரம்பமானது.

உலகப் பெருமஞ்சத் திருப்பவனி இடம்பெற்றபோது பேரிகைகள் முழங்க கண்களைக் கவரும் சிலம்பாட்டம், பொம்மலாட்டம், மயிலாட்டம், குதிரையாட்டம், கரகாட்டம் உள்ளிட்ட தமிழர்களின் பாரம்பரியக் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(ம-66)


## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (புத்தகசாலை), சமுத்திரா ரேடர்ஸ் (Hardware) ஆகிய நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

077 494 9683, 077 077 6469

## வேலையாட்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பூக்கடை ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்பு: 077 400 5023

## TECHNO WORLD
A/L தொழில்நுட்பப் பிரிவு

இலவச செயன்முறை
வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்

பொறியியல் தொழினுட்பம்
திகதி - 29,30,31,01- January 2024
நேரம் - காலை 8.30 - 12.00

நவீன ஆய்வுகூட வசதிகளுடன்
மற்றும் அனுபவம் மிக்க ஆசிரியர்குழாம்

இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 017 5346



## 31ம் நாள் ஆத்மசாந்தி நிகழ்வும் நன்றி நவிலலும்



தோற்றம் 21 . 03 . 1950
மறைவு 27 . 12 . 2023

திருமதி சௌபாக்கியகௌரி பத்மநாதன்

அன்னாரின் இத்துயரகரமான காலகட்டத்தில் இரங்கற்கிரியைகளிலும் எமது ஆறாத் துயரத்திலும் எமது துன்பத்தை தங்களின் துன்பமாகச் சுமந்து பல்வேறு வகைகளிலும் உதவி புரிந்த அத்தனை நல் உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (26.01.2024) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
021 224 3658

ம.பத்மநாதன்
"இராஜேஸ்த்தான்"
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு

கடந்த 06.02.2023 அன்று
இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம்



அவரகளின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கிரியைகள் இன்று (26.01.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


கோப்பாய் வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
077 732 4648

குடும்பத்தினர்.

தோற்றம் 17.01.1944
மறைவு 06.02.2023

## மரண அறிவித்தல்

மண்ணில் மலர்வு 17 . 04 . 1948



விண்ணில் மலர்வு 25 . 01 . 2024

### துரைஐயா மகாலிங்கம்
(மகாமினி சவுண்ட்)

பூநாறி மரத்தடியைப் பிறப்பிடமாகவும் 958/47, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைஐயா மகாலிங்கம் (மினி மகாலிங்கம்) அவர்கள் நேற்று (25.01.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைஐயா சிவக்கொழுந்து தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான பாக்கியநாதன் பார்வதி தம்பதிகளின் மருமகனும், பரமேஸ்வரி (குயிலா) அவர்களின் அன்புக் கணவரும், பிரேமகாந்தன் சர்மிலா, தேவானந்த், பவானந்த், சோபானந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 929 3573, 077 979 8353


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org